## பெருநகர சென்னை மாநகராட்சி

## செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 372** **நாள்: 10.11.2025**

**திரு.வி.க.நகர் மண்டலத்திற்குட்பட்ட நேர்மை நகர் மயானபூமியில் பராமரிப்புப் பணிகள் நடைபெறவுள்ளதால், பொதுமக்கள் தாங்கல் மற்றும் ஜி.கே.எம். காலனி மயானபூமிகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.**

பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-66க்குட்பட்ட நேர்மை நகர் மயானபூமியில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள உள்ளதால், 11.11.2025 முதல் 25.11.2025 வரை 15 நாட்கள் மேற்கண்ட மயானபூமி இயங்காது.

எனவே, பராமரிப்புப் பணிகள் நடைபெறும் நாட்களில், பொதுமக்கள் அருகிலுள்ள வார்டு-67க்குட்பட்ட தாங்கல் மயானபூமி மற்றும் வார்டு-64க்குட்பட்ட ஜி.கே.எம். மயானபூமி ஆகியவற்றைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**